R5316

## QUESTION ON JUSTIFICATION

# நீதிமானாக்கப்படுதல் பற்றி கேள்வி

**கேள்வி :** சபையின் நீதிமான்களாக்கப்படுதல் பற்றிய உங்கள் கருத்தை மாற்றிக்கொண்டிருக்கிறீர்களா? அதனால் வேதாகம பாடங்கள் தொகுதி 1 இல் இந்த தலைப்பு பற்றிய கருத்து இனி உங்கள் கருத்தை குறிக்காதா?

**பதில்:** நிச்சயமாக இல்லை! அப்படியிருந்தால் நாங்கள் ஏன் தொடர்ந்து பிரசுரித்து விநியோகித்து வருகிறோம். “நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம் போலிருக்கும்.” ஆகையால் நமது நீதிமானாக்கப்படுதலைப் பற்றிய பாடம் கர்த்தரின் பிரியமான ஜனங்களில் அநேகரை அனுதினமும் தெளிவுப்படுத்திக் கொண்டிருக்கிறது. முன்பு நீதிமானாக்கப்படுதல் பற்றிய அம்சங்களை பகுத்துணராதிருந்தார்கள். இப்போது தெளிவடைந்திருக்கிறார்கள். விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் படிப்படியான செயல்பாடு என்பதை கடந்த காலத்தில் அறியாதிருந்தார்கள். சிலர் இன்னும் அறியாதிருக்கிறார்கள். விசுவாசத்தின் ஒவ்வொரு படியும் உச்சத்தின் அருகே நம்மை கொண்டு வருகிறது.

ஆனால் நமது விசுவாசம், நமது கீழ்ப்படிதலினாலும், கர்த்தரிடத்தில் முழுமையான அர்ப்பணத்தினாலும் வெளிப்படுத்தப்படும் வரை முழுமையாக உச்சத்தை அடையமுடியாது. பிறகு நமது மாபெரும் பரிகாரி அர்ப்பணிக்கப்பட்ட நமது சரீரங்களை ஏற்றுக்கொண்டு, அவற்றை தமது புண்ணியத்தினால் சாட்டுதல் செய்து, நீதியின் பார்வையில் அவற்றை முழுமையாக நீதிப்படுத்தினார். பிறகு அது பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு, பரம பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு முழுமையாக நீதிமானாக்கப்பட்ட ஆத்துமாவாக இருந்தது. ஆகையால் அவன் ஒரு புதுசிருஷ்டி, ஆவியின் தளத்திற்கு ஜெனிப்பிக்கப்பட்ட ஒரு பிள்ளை.

விசுவாசத்தில் முன்னேறும் காலத்தில், நீதிமானாக்கப்படுதல் படிப்படியாக அணுகப்பட்டு, தனிப்பட்டவர், தெய்வீக கிருபையை அதிகமதிகமாக பெற்றார்கள். அவர் மானிட தளத்தில் ஒரு புத்திரனாக மனித சுபாவத்தில் முழுமையாக நீதிமானாக்கப்பட்ட நிலைமைக்கு வரும்வரை, கடைசி படிக்கு செல்லும் வரை இது நடைபெறாது. ஒரு கணப்பொழுது மட்டுமே அவர் அங்கே நிலைத்திருந்தார். பிறகு பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுதல், பூரணமாக்கப்பட்டவரின் பலியை ஏற்றுக்கொண்டு அவரை ஒரு புது சிருஷ்டியாக்க ஆரம்பித்தது.

### தற்காலிக மற்றும் உண்மையான மகன்

இவையெல்லாம் யுகங்களின் படத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தளம் அதன் பல்வேறு படிகளில் நீதிமானாக்கப்பட்ட நிலைமையை குறிக்கிறது. பழைய ஏற்பாட்டு காலத்தில் ஆபிரகாம் மற்றும் மற்றவர்களும் அவர்களது விசுவாசத்தினால் தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக்கப்பட்டார்கள். ஜீவனுக்கு அவர்கள் நீதிமான்களாக்கப்படவில்லை. குமாரத்துவத்துக்குக்கூட நீதிமானாக்கப்படவில்லை. அவர்கள் தேவனுடைய நட்புக்கும் அவரது கிருபை மற்றும் மேற்பார்வையான பராமரிப்புக்கும் நீதிமான்களாக்கப்பட்டார்கள். இயேசு மரித்து, உயிர்த்து, பரலோகத்திற்கு எழுந்தருளி, அவரது புண்ணியத்தை சபையின் சார்பாக சாட்டுதல் பண்ணின பிறகு, முழு அர்ப்பணத்தில் அவரது அடிச்சுவட்டில் நடக்க விரும்புகிற சகல வகுப்பாருக்கும் அவர் பரிகாரியானார். அவரது புண்ணியத்தை சாட்டுதல் பண்ணின ஒவ்வொருவருக்கும் நீதிமானாக்குதலின் வேலையை அமைக்கிறது. இது அவரது பலியை ஏற்று, புது சுபாவத்திற்கு அவரை ஜெனிப்பிக்கவும் தேவனுக்கு சாத்தியப்படுத்துகிறது.

ஆபிரகாம் தேவனுடைய நண்பன் என்று அழைக்கப்பட்டார். ஏனெனில் அவரது விசுவாசமும் விருப்பமும் தேவனுக்கு இசைவாக இருந்தது. யோவான் ஸ்நானனைப்பற்றி நாம் வாசிப்பதாவது: “மணவாளனுடைய தோழனோ... மணவாளனுடைய சத்தத்தைக் குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான்.” “ஊழியக்காரன்” என்ற வார்த்தை வேதாகமத்தில் மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு கீழிருந்த யூதர்களுக்கு விசேஷமாக பயன்படுத்தப்பட்டது. அந்த உடன்படிக்கையினால் தேவனுடைய பராமரிப்பையும் ஆசீர்வாதத்தையும் அனுபவித்தார்கள். மேலும் அவர்கள் தேவனுடைய நண்பர்களாக இருக்கும்படி அனுமதிக்கப்பட்டார்கள். அவர்களில் அநேகர், ஆபிரகாமும் கூட தேவனுடைய நண்பர்களாக இருந்து, குமாரனுக்குரிய சகல உரிமைகளையும் பெற தகுதியுள்ளவர்களாக இருந்தும் கூட, தெய்வீக திட்டத்திற்கிசைவாக, அவர்கள் தேவனுடைய குமாரர்களாக அங்கீகரிக்கப்பட முடியாதிருந்தார்கள். அப்போஸ்தலர் கூறுவது போல, “குமாரன் என்றைக்கும் நிலைத்திருக்கிறார்.” கிறிஸ்துவின் பலி, பாவம் மற்றும் மரணத்தை நீக்கும் வழியை திறக்கும்வரை யாரும் தெய்வீக புத்திர சுவீகாரத்தை பெற முடியாதிருந்தது.

அதேபோல இப்போது கூட நாம் தேவனுடைய குமாரர்களாக நிற்பதும் கூட தற்காலிகமானது. நாம் தேவனுடைய அன்பில் நிலைத்திருந்தால், நாம் அவர்களுடைய குமாரர்களாக நிலைத்திருந்து ஏற்றக்காலத்தில் பூரணராக்கப்படுவோம். ஆனால் யாராவது தெரிந்து செய்கிற பாவத்துக்கும் அதன் ஊழியத்திற்கும் திரும்பிச் சென்றால் அவன் தனது புத்திர சுவீகாரத்தை இழப்பான். அவனுடைய நாமம் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகத்திலிருந்து நீக்கப்படும். பிதாவுடன் அவனது பரிகாரியாக இருப்பதும் நின்று போகும். அவன் தேவனுடைய குமாரனாக நிலைத்திராததால் இன்னொருவன் அந்த இடத்தில் அபிஷேகம் பண்ணப்பட்ட சரீரத்தின் அங்கமாக இருக்கும்படி அனுமதிக்கப்படுவான்.

இப்படியாக அப்போஸ்தலர் அறிவிப்பதாவது: "இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், (கருவாகஇருக்கிறோம்) இனி எவ்விதமாயிருப்போம் என்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவர் (நமது இரட்சகர், நமது தலையானவர்) வெளிப்படும் போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரை தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போம்." (1யோவான் 3:2) அதாவது நமது தற்கால புத்திர சுவீகாரம் தற்காலிகமானது, உண்மையான புத்திர சுவீகாரம் நம்முடைய தகுதி காணும் சோதனை காலம் முடிந்த பிறகே ஆரம்பமாகும். தங்களுடைய விசுவாசம் மற்றும் உண்மைத்தன்மை ஏற்புடையதாக நிரூபிப்பவர்கள் மட்டுமே முழுமையான அளவில் மகிமையான உயிர்த்தெழுதலின் மாற்றத்தால் குமாரர்களாக ஆக்கப்படுவார்கள். இப்படியாக நாம், அர்ப்பணத்தின் முழு நீளம் செல்லும் வரை யாரும் N தளத்திற்கு போக முடியாததைப்போல யாரும் L தளத்தை அடையாதவரை புத்திர சுவீகாரத்தை பெற முடியாது என்பதை காண்கிறோம்.

## "மேன்மையான உயிர்த்தெழுதல்"

பழங்கால பாத்திரர்கள் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, தீர்க்கதரிசிகள் முதலானவர்கள் (எபிரேயர் 11:38-40) தேவனுடைய குமாரர்கள் என்று கூறப்பட முடியாவிட்டாலும் குமாரர்களாக ஆகாவிட்டாலும், அவர்கள் அப்படிப்பட்ட தளத்திற்கோ அந்த பெயருக்கோ தகுதியற்றவர்கள் என்பதினால் அல்ல. அவர்கள் "தேவனுக்கு பிரியமானவர்களாயிருந்தார்கள்" என்று நமக்கு உறுதியளித்து, இதற்கு நமது கவனத்தை அப்போஸ்தலர் ஈர்க்கிறார். மேலும் பூரணத்திற்கு குறைவானது எதுவும் அவரை பிரியப்படுத்தாது என்றும் கூறுகிறார். அவர்களை குமாரர்களாக ஏற்றுக்கொள்ளுவதற்கு தடையாக இருந்தது எதுவென்றால், முதலாவது அவர்களது சார்பாக பாவ நிவாரண இரத்தம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அவசியமாகும். பழங்கால பாத்திரர்கள் "மேலான உயிர்தெழுதலை" அனுபவித்து பரிபூரணர்களாக வருவார்கள் என்று நாம் புரிந்து கொள்ளுகிறோம். அவர்கள் பாவம் செய்வதற்கு முன் இருந்த ஆதாமைப்போல, மனதிலும், இருதயத்திலும் விருத்தியடைந்தவர்களாக, அப்பியாசப்படுத்தி, சோதிக்கப்பட்டு, தேவனுக்கு உண்மையுள்ளவர்கள் என்று நிரூபித்தவர்களாக இருப்பார்கள். அந்த பூரண நிலையில் அவர்கள் மேசியாவின் ராஜ்யத்தில் மனுக்குலம் கீழ்ப்படிதலினால் அடையப்போகிற நிலைமைக்கு உதாரணங்களாக இருப்பார்கள்.

அவர்கள் உயிர்த்தெழுந்த கணத்திலிருந்து இந்த பூரண மனிதர்கள், தேவனிடம் வர ஆதாம் பெற்றிருந்த அதே உரிமையை பெற்றிருப்பார்கள்; மேலும் ஆதாமைப் போல தேவனுடைய குமாரர்கள் என்று அழைக்கப்பட தகுதியாயிருப்பார்கள். ஒரே காரியத்தை தவிர, அந்த ஒன்று என்னவென்றால், பழங்கால பாத்திரர்களும் மீதமுள்ள மனுக்குலத்தைப்போல மேசியாவின் ராஜ்யத்தில் ஆயிரம் வருடங்கள் புதிய உடன்படிக்கையின் மாபெரும் மத்தியஸ்தரின் கையில் இருப்பார்கள். வேத வாக்கியங்களின்படி அந்த காலத்தின் முடிவுவரை, ராஜ்யம் பிதாவனவரிடம் சமர்ப்பிக்கப்பட மாட்டாது.

ஆகையால் பழங்கால பாத்திரர்கள் கிறிஸ்துவின் ஆளுகை முடியும் வரை குமாரர்களாக பிதாவானவரிடம் நேரடியாக தொடர்பு கொள்ளவோ, அங்கீகரிக்கவோ முடியாது. பிறகு கிறிஸ்து, "தேவனே சகலத்திலும் சகலமுமாய் இருப்பதற்கு,"ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார். அப்பொழுது சகலமும் பிதாவானவருக்கு கீழ்ப்பட்டிருக்கும். எனினும் ஆயிரம் வருடம் கிறிஸ்துவின் மத்தியஸ்த ஏற்பாடுகளில் பழங்கால பாத்திரர்களும் மற்றவர்களும் பூரணப்படுத்தப்படுவார்கள். பூரணத்தை பெற்ற அளவுக்குத்தக்கதாக, அவர்கள் சலுகைகளையும், ஆசீர்வாதங்களையும் அனுபவிப்பார்கள். ஏனெனில், இனி அவர்கள் "இவ்வுலகத்தின் அதிபதியின்" கீழும், பாவம் மற்றும் மரணத்தின் கீழும் இராமல், ஜீவாதிபதியின் கீழாகவும் அவரது நீதியான ஆளுகைக்கு கீழாகவும் ஜீவனுக்குள் இருப்பார்கள்.